பல துறைகளில் இவர்களை எந்த அளவிற்கு ஈர்த்துக் கொள்ளலாம் என்ற கணக்கின் அடிப்படையில்தான் அவர்களை நிரந்தரமாக்க முடியும். வேலை தரும்போது நிரந்தரமாக எடுத்துக் கொள்வோம் என்ற உறுதி தருவதற்கில்லை. முதலில் தற்காலிகமாகத்தான் எடுக்க வேண்டியிருக்கிறது.

Prevention of Food Adulteration Act

* 65 *Q.*—THIRU C. GOVINDARAJAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government propose to extend the Prevention of Food Adulteration Act to Neyveli Township?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : நெய்வேலி டவுன்ஷிப்பில் ஒரு லட்சத்திற்கும் மேல் ஜனத்தொகை பெருகியிருக்கிறது மட்டுமல்ல, ஏற்கெனவே இந்த உணவுப்பண்டங்கள் எல்லாம் கூட்டுறவு ஸ்டோர்ஸ் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. இப்போது அது தனியார் துறைக்கு விடப்பட்டிருப்பதால் பால், எண்ணெய் எல்லா வற்றிலும் கலப்படம் அதிகமாகியிருப்பதால் இந்தச் சட்டத்தை அங்கு விஸ்தரிக்க அரசு விரைவில் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நெய்வேலி ஒன்றியப் பகுதியைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் சட்டமாக நடைமுறையில் கொண்டுவரப்படவில்லை. ஆனால் நெய்வேலி கார்ப்பரேஷன் பகுதியைப் பொறுத்தவரையில் இது அமலில் இருந்து வருகிறது. பக்கத்திலுள்ள கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியன் ஹெல்த் இன்ஸ்பெக்டர் திங்கள்தோறும் நான்கு சாம்பிள்கள் அனுப்ப வேண்டுமென்ற அடிப்படையில் அனுப்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். நெய்வேலி ஒன்றியப் பகுதி முழுவதிலும் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டுமென்றால் ஒன்றியப் பகுதியினர் இந்தச் சட்டத்தை அமல் படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தீர்மானத்தை அவர்கள் அனுப்பி வைத்தால் அரசு அதைப்பற்றிக் கவனிக்கும். மேலும் பல ஒன்றியப் பகுதிகளில் எல்லாம் இச் சட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் வருகின்றன. விரைவில் கோவையில் இந்தப் பொருள்களை ஆராய ஆராய்ச்சிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. விரைவில் அது முடிந்த பிறகு இக்கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ள எல்லா இடங்களையும் அங்கீகரிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த உணவுக் கலப்படத்திற்கு முக்கிய காரணமாக உள்ள பெரிய மொத்த வியாபாரிகள் இதற்கான தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் அதை வாங்கி விற்கிற சில்லறை வியாபாரிகள் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய ஒரு ஆபத்தும் இப்போது இருக்கிறது. ஆகவே கலப்படத்திற்கு முக்கிய காரணமாக உள்ள மொத்த வியாபாரிகள் தண்டனை

1970 ஆகஸ்ட் 27]

அடையக்கூடிய முறையிலும் சில்லறை வியாபாரிகள், சின்ன வியாபாரிகள், தண்டனை அடையாமலும் இருக்கக்கூடிய விதத்தில் அரசு தக்க முயற்சிகள் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுமாதிரி சில்லறை வியாபாரிகள் சிலர் அந்தக் கோரிக்கையைக் கொண்டுவந்துள்ளார்கள். அது சம்பந்தமாக ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். யார் கலப்படம் செய்கிறார்களோ அவர்கள்தான் தண்டிக்கப்படுவது நியாயம். மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கும் சில்லறை வியாபாரிகள் கலப்படம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து எடுத்து தெரிவிப்பதற்கு இல்லை. ஆகவே, அவர்களுக்கு தண்டனை கொடுப்பது என்பது நியாயமாக இருக்காது என்று சொல்லி எந்த இடங்களிலிருந்து அவை விநியோகிக்கப்படுகின்றன என்ற முழு உண்மையை அவர்களிடமிருந்தும் பெற்று அதன் அடிப்படையில் கலப்படத்திற்குக் காரணமாக இருப்பவர்கள், அது எங்கிருந்து உற்பத்தியாகிறது அல்லது எங்கிருந்து விநியோகிக்கப்படுகிறது அல்லது எங்கிருந்து பாக்கெட்டில் போடுகிறார்கள் என்றெல்லாம் பார்த்து கலப்படம் செய்கிறவர்களுக்குத் தண்டனை அளிப்பது என்ற முறையில் சில்லறை வியாபாரிகளிடமிருந்து அவை எங்கிருந்து வந்தன என்பதைத் தெரிந்துகொள்கிற அளவிற்குத் தெரிந்துகொண்டு சில்லறை வியாபாரிகள் தண்டனைக்கு உள்ளாவது நீதிக்கு இடம் தருவதாக இருக்காது என்று சொல்லி அது பற்றி தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி துறையினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அரசுக் கடன்கள்

* 66 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த காலத்தில் (1968-69-ல்) விளைவில்லாத திருமயம், ஆலங்குடி, குளத்தூர் வட்டப் பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள உரக் கடனை, மழையின்றி விளையாத காரணத்தால் தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இயலா நிலையிலுள்ளவர்களிடமிருந்து அரசு கடன்களை வசூலிப்பதில் மெல்ல மெல்ல வசூலிக்கும் கொள்கையைக் கையாளும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளார்.

புலவர் பொ. பொன்னம்பலம் : உரத்திற்காகக் கடன் வாங்கி பிறகு உரத்தையும் வாங்கி நிலத்தில் போட்டு தண்ணீர் இல்லாத காரணத்தினால் விளையாமல் போனால் விவசாயிகள் எதிலிருந்து அந்த உரக்கடனைக் கட்டமுடியும் என்ற சூழல் இருக்கிற காரணத்தினால் உரக்கடனைத் தள்ளுபடி செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விழைகிறேன்.